**தலைப்பு 272 - குருணாகலை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கையின் 1 ஆம் பந்தி தொடக்கம் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகம் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியில் தலைப்புக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

## 1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | குருணாகலை | (கீ) | ரிதீகம |
| (ஆ) | பன்னல | (கு) | மல்லவப்பிட்டிய |
| (இ) | வாரியப்பொல | (கூ) | மாஸ்பொத்த |
| (ஈ) | இப்பாகமுவ | (கெ) | பிங்கிரிய |
| (உ) | கனேவத்த | (கே) | நாரம்மல |
| (ஊ) | மஹவ | (கை) | பொல்பித்திகம |
| (எ) | கிரிபாவ | (கொ) | கல்கமுவ |
| (ஏ) | அம்பன்பொல | (கோ) | எஹடுவெவ |
| (ஐ) | பண்டுவஸ்நுவர (மேற்கு) | (கௌ) | நிக்கவெரட்டிய |
| (ஒ) | பண்டுவஸ்நுவர (கிழக்கு) | (ச) | கொபெய்கனே |
| (ஓ) | குளியாப்பிட்டிய (மேற்கு) | (சா) | ரஸ்நாயகபுர |
| (ஔ) | குளியாப்பிட்டிய (கிழக்கு) | (சி) | கொடவெஹெர |
| (க) | அளவ்வை | (சீ) | வீரம்புகெதர |
| (கா) | மாவத்தகமை | (சு) | பமுணாகொட்டுவ |
| (கி) | பொல்கஹவெல | (சூ) | உடுபத்தாவ |

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

குருணாகலை மாவட்டச் செயலகத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள் ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் என்பவற்றின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 ஜுன் 30 திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான

மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுத்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் கணக்கிணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்கப் பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த நிதியேற்பாடு ரூபா 1,564.46 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 1,559.77 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, மாவட்டச் செயலகத்தின் நிகர நிதியேற்பாட்டில் சேமிப்புக்குள்ளாகிய தொகை ரூபா 4.69 மில்லியன் அல்லது நிகர நிதியேற்பாட்டில் 0.30 சதவீதமாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

**2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| **செலவினம்** | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| மீண்டுவருவன | 1,202.21 | 1,200.39 | 1.82 | 0.15 |
| மூலதனம் | 362.25 | 359.38 | 2.87 | 0.79 |
| மொத்தம் | 1,564.46 | 1,559.77 | 4.69 | **0.30** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்காளலும் திணைக்களங்காளலும் வழங்கப்பட்ட நிதியேற்பாடு**

பல்வேறு பணிகளுக்காக ஏனைய 28 அமைச்சுக்காளாலும் 21 திணைக்களங்களாலும் முறையே ரூபா 8,261.17 மில்லியன் மற்றும் ரூபா 4,330.80 மில்லியன் என மொத்தமாக ரூபா 12,591.97 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அந் நிதியேற்பாட்டில் முறையே ரூபா 5,697.71 மில்லியன் மற்றும் ரூபா 4,266.28 மில்லியன் என மொத்தமாக ரூபா 9,963.99 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, முறையே ரூபா 2,563.46 மில்லியன் மற்றும் ரூபா 64.52 மில்லியன் என மொத்தமாக ரூபா 2,627.98 மில்லியன் அல்லது முறையே 31.03 சதவீதம் மற்றும் 1.49 சதவீத நிதியேற்பாடு சேமிப்புக்குள்ளாகியது. இவை தொடர்பான விபரம் பின்வருமாறு.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் விடய இலக்கம் 27201 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளவாறான எல்லைகளும் கீழே காணப்படுகின்றன.

| | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| விடய இலக்கம் | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | அதிகுறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 27201 | 80.00 | 78.51 | 75.00 | 67.54 | 323.00 | 272.32 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளது மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 916.09 மில்லியன் ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், குருணாகலை மாவட்ட செலயகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறு முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகளுக்கு அமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் அடங்கிய அவதானிப்புரைகளில் போதியதும் முக்கியத்துவம் வாய்ந்ததும் 3.1 முதல் 3.19 வரையிலான பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 272 - குருணாகலை மாவட்டச் செயலகம்

### 3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

மாவட்டச் செயலகம் கீழே காணப்படும் சில பதிவேடுகளைப் பேணியிருக்காததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தன என்பது கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை |
| (ii) | கணனித் துணைப் பாகங்கள் மற்றும் மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை |
| (iii) | உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரகாரம் அனுபந்தம் 26 | பேணப்படவில்லை |
| (iv) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்படவில்லை |
| (v) | நட்டங்கள், இழப்புகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்படவில்லை. |
| (vi) | பொறுப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்படவில்லை |

### 3.2 எல்லைகளைக் கடைப்பிடிக்காமை

மாவட்டச் செயலகத்தின் விடய இலக்கம் 27201 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முறபணக் கணக்கினது ஆகக் குறைந்த எல்லை ரூபா 75,000,000 என பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டு

முடிவில் உள்ளவாறு ரூபா 67,545,331 சேகரிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 7,454,669 இனால் எல்லையினை அண்மிக்க முடியாது போயிருந்தது.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.3.1 பாதீட்டு முரண்கள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பத்து செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு ரூபா 2,616,895 இனை மிகைத்து ரூபா 420,347 பொறுப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) மாவட்டச் செயலகத்திற்குரிய ரூபா 196,188 கூட்டுத் தொகைச் செலவினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செலவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 3.3.2 ஏனைய அமைச்சுக்களும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியினது பயன்பாடு

இது சம்பந்தமாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியாகிய ரூபா 92,500 பயன்படுத்தப்படாமையால் ஏற்பாடு செய்யப்பட்ட அந்நிதி முற்றாகச் சேமிப்புக்குள்ளாகியது.

(ஆ) இருபது அமைச்சுக்களும் 7 திணைக்களங்களும் ஏற்பாடு செய்த நிதி பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு 5 சதவீதத்திற்கு மேற்பட்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளது மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 916,092,649 ஆகும்.

இது சம்பந்தமாக கீழே காணப்படும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குருணாகலை மாவட்டச் செயலகத்தினதும் 12 பிரதேச செயலகங்களினதும் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 17,187,207 கூட்டுத் தொகையுடைய வைப்புகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலகத்தின் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கமநெகும மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் கீழான கொள்வனவுகளுக்குரிய பிடிகாசு ரூபா 1,009,306 எதிர்பார்த்த பணி நிறைவேற்றப்படாது நெடுங்காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்றுக்கள்**

---

விடய இலக்கம் 27201 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வைகளின்போது கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரஸ்நாயகபுர பிரதேச செயலகத்தின் மீளாய்வாண்டிற்கான வரவு மீதியில் ரூபா 378,625 தவறாக வரவு வைக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின்போது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடனை வழங்குவதற்கு மாவட்டச் செயலகத்தால் குளியாப்பிட்டிய மேற்கு பிரதேச செயலகத்திற்கு ரூபா 2,505,000 வழங்கப்பட்டிருந்தது. பிரதேச செயலகத்தால் ரூபா 2,764,465 கூட்டுத்தொகையான கடன்கள் வழங்கப்பட்டமையால் அவ்வரம்பை மீறி ரூபா 259,465 கடன் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2004 ஜுன் 30 மற்றும் 2011 ஏப்ரல் 08 ஆகிய திகதிகளில் மரணமடைந்த இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 211,130 மற்றும் ரூபா 3,500 என மொத்தமாக ரூபா 214,630 கடன் மீதியை அறவிடுவதற்கு 2014 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) எட்டு பிரதேச செயலகங்களின் 09 உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்று ஓராண்டிற்கு மேலான காலம் கடந்திருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் மீதியான ரூபா 245,736 ஓய்வூதியப் பணிக் கொடையிலிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

(உ) 2013 ஆம் ஆண்டில் கடமை இடை நிறுத்தத்திற்குள்ளான மல்லவப்பிட்டிய பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 53,187 கடன் மீதியானது மீளாய்வாண்டிற்கான கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்படவில்லை. மேலும், 2014 பெப்ரவரி 03 ஆந் திகதி சேவையை விட்டு விலகியதாக அறிவித்திருந்த உத்தியோகத்தர் ஒருவருடைய பெயரில் மேற்படி கடன் மீதி கணக்கில் காட்டப்பட்டிருந்தது. இக்கடனானது ஒரே உத்தியோகத்தருடையதா என்பதை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஊ) சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கினது ஆண்டின் இறுதி மீதி ரூபா 272,849,772 ஆகும். எனினும், திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 272,322,431 ஆகியமையால் ரூபா 527,341 வேறுபாடு நிலவியது.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 3.6.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமுல்படுத்தல்

---

2014 ஆம் ஆண்டின்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் 03 கூட்டங்களை நடாத்தியிருந்தன.

## 3.7 சொத்து முகாமைத்துவம்

---

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது தெரியவந்தது.

| சொத்தின் வகை | பிரதேச செயலகம் | கூறுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| காணி (ஹெக்டயார்) | அளவ்வை | 01 (கூறினது எண்ணிகை காட்டப்படவில்லை பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ மனை அமைந்துள்ள காணி) | ஏறக்குறைய 14 ஆண்டுகள் |
| கட்டிடங்கள் | அளவ்வை | பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ மனை | ஏறக்குறைய 14 ஆண்டுகள் |
| | பண்டுவஸ்நுவர மேற்கு | பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ மனை | ஏறக்குறைய 5 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | கல்கமுவ | மோட்டார் சைக்கிள் | ஏறக்குறைய 01 ஆண்டு |
| | | கெப் வண்டி | ஏறக்குறைய 1 ½ ஆண்டுகள் |
| | இப்பாகமுவ | மோட்டார் சைக்கிள் | ஏறக்குறைய 2 ஆண்டுகள் |
| | பமுனுகொடுவ | மோட்டார் சைக்கிள் | ஏறக்குறைய 7 ஆண்டுகள் |
| | கிரிபாவ | கெப்வண்டி | ஏறக்குறைய 1 ஆண்டு |
| | | மோட்டார் சைக்கிள் | ஏறக்குறைய 6 ஆண்டுகள் |
| மின்சார உபகரணங்கள், கணனிகள் | பண்டுவஸ்நுவர மேற்கு | 01 பெனாசொனிக் தொலைக்காட்சி இயந்திரமும் 06 கணனித் துணைப் பாகங்களும் | ஏறக்குறைய 3 ஆண்டுகள் |
| | மாவட்ட கொள்கைத் திட்டமிடல் பிரிவு | ரூபா 1,017,790 பெறுமதியான வீடியோ கெமரா மற்றும் துணைப் பாகங்கள் | ஏறக்குறைய 01 ஆண்டு |

(ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 02.⁚.2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் அவ்வறிக்கையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், குருநாகலை மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ மனையில் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்திக் குறித்த அறிக்கையை 2015 ஜுன் 19 ஆந் திகதியளவிலேனும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்க வில்லை.

(ii) வீரம்புகெதர பிரதேச செயலகத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் உபயோகப்படுத்தப்பட முடியாத 17 பொருட்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 772 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 2014 ஆம் ஆண்டிற்கான பொருட் கணிப்பு அறிக்கைகளைப் பரிசீலிக்கையில் நாரம்மல, பொல்பித்திகம, பிங்கிரிய, கொபெய்கனே, வீரம்புகெதர, அம்பன்பொல, பண்டுவஸ்நுவர (கிழக்கு), கனேவத்த, பன்னல ஆகிய பிரதேச செயலகங்களில் பொருட் பதிவேடுகள் சரியாக தயாரிக்கப்பட்டிருந்தபோதும், உள்ளவாறான மீதிகளைக் கணிப்பிடுகையில் அப்பொருட்கள் மாகாண சபைக்கா அல்லது மத்திய அரசாங்கத்திற்கா உரித்தானவை என்பதை இனங்காண முடியாதிருந்தது.

(iv) பிங்கிரிய பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ வாகனம் பொல்பித்திகம பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும், அவை குளியாப்பிட்டிய மேற்கு பிரதேச செயலகப் பொருட் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(v) பிங்கிரிய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனம் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை.

(vi) 2014 ஆம் ஆண்டிற்கான 30 பிரதேச செயலகங்களுக்குரிய பொருட் கணிப்பு அறிக்கைகளைப் பரிசோதித்தபோது 764 விடயங்களுக்குரிய 2391 பொருட்களும் உபகரணங்களும் பயன்படுத்த முடியாத பொருட்களாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருக்கும் அப் பொருட்களை அகற்றுவதற்கோ அல்லது வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ முயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.8 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்வற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | |
| அத்தியாயம் XIV பிரிவு 5.4.1 | 38,210 | இப்பாகமுவ பிரதேச செயலாளர் மற்றும் அவரது மனைவி ஆகியோரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய உத்தியோகபூர்வ மனைக்கான வாடகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 237(ஆ) | 57,877 | குளியாப்பிட்டிய தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கென நிர்மாண வேலைகளுக்கு 3.6 கியூப் மணல் மற்றும் 5.25 கியூப் கொங்கிரீட் கற்கள் என்பன பெறப்பட்டிருந்தன. அவை குறித்த கையிருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்படாதிருந்தன. |
| (ii) | நிதிப் பிரமாணம் 264 | 129,605,403 | தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கென மேற்கொள்ளப்பட்ட 47 கொடுப்பனவுகள் தொடர்பாக முறைப்படி தொடர் இலக்கங்கள் இடப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் கொடுப்பனவு உறுதிச் சான்றுகளில் இணைக்கப்படாதிருந்தன. |
| (iii) | நிதிப் பிரமாணம் 341 | 54,688 | கல்கமுவ மற்றும் வீரம்புகெதர பிரதேச செயலகங்களில் அடியிதழ்சேர் புத்தகங்களின் கட்டுப்பாடு பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் வழங்குதல் மற்றும் அவற்றைத் திருப்பி ஒப்படைத்தல், களஞ்சியப் புத்தகங்களில் பொருட்களைப் பெறுதல் வழங்குதல் என்பவற்றைச் சரிவரக் குறித்துக் கொள்ளுதல் போன்றன முறைப்படி இடம்பெற்றிருக்க வில்லை. |
| (iv) | நிதிப் பிரமாணம் 371 | 11,360,140 | குறித்த வேலைக்கெனப் பெறப்படும் செயல்நிமித்த உபகட்டுநிதி குறித்த விடயம் முடிவடைந்த உடனேயே தீர்த்து வைக்கப்பட வேண்மாயினும், 9 சந்தர்ப்பங்களில் தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்காக ரூபா 11,317,990 கூட்டுத் தொகையும் அம்பன்பொல மற்றும் கிரிபாவ பிரதேச செயலகங்களில் முறையே 3 சந்தர்ப்பங்களில் ரூபா 10,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | மற்றும் 4 சந்தர்ப்பங்களில் ரூபா 32,150 எனப் பெற்றிருந்த முற்பணமும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன. அவ்வாறே முற்பணத்தைப் பெற்ற நிறுவனம் பற்றுச்சீட்டை வழங்கியிருக்கவுமில்லை. |
| | (v) | நிதிப்பிரமாணம் 540(2), (3) மற்றும் 541 என்பன | 12,610 | கல்கமுவ பிரதேச செயலகத்தில் பணத்தை வைப்பிலிடுதல், நாளாந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் சம்பந்தமாக முறையான உள்ளகக் கட்டுப்பாடு நிலவவில்லை. அதன் காரணமாக, காசு பௌதீக பரிசோதனையின் போது சிறாப்பரிடத்தே ரூபா 12,610 காசு மிகையொன்று நிலவியது. |
| | (vi) | நிதிப் பிரமாணங்கள் 1645(ஆ) மற்றும் 1646 | - | மாவட்டச் செயலகத்தின் வாகனக் குழாமில் உள்ள 2 வாகனங்களதும் கல்கமுவ, மஹவ, கிரிபாவ பிரதேச செயலகங்களின் வாகனம் குழாமில் உள்ள வாகனங்களதும் நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| **(இ)** | **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | | |
| | (i) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | மாவட்டச் செயலகத்திலும் அதன் கீழ் உள்ள பல்வேறு பிரிவுகளதும் 13 வாகனங்கள் மற்றும் 30 பிரதேச செயலகங்களது வாகனங்கள் என்பவற்றினது எரிபொருள் நுகர்வு 06 மாதத்திற்கு ஒரு முறை பரிசீலிக்கப்படாதிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2008 ஜுன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | மாவட்டச் செயலாளர் பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாகனத்திற்குப் புறம்பாக கடமைகளின் பொருட்டு அலுவலக வாகனக் குழாமில் உள்ள வாகனங்கலும் பயன்படுத்தப்பட்டிருந்தன. |
| (iii) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | வீரம்புகெதர பிரதேச செயலகத்தில் கடமைக்கு வருதல் செல்லுதல் என்பவற்றைக் குறித்துக் கொள்வதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படாதிருந்தது. |

**(ஈ) ஓய்வூதியத் திணைக்களச் சுற்றறிக்கை**

-------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2009 டிசெம்பர் 15 ஆந் திகதிய வி/வெ 2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | • மஹவ பிரதேச செயலகத்தில் 3 நபர்களிடமிருந்து அவர்கள் உயிர்வாழ்வதற்கான சான்றிதழ் பெறப்படாது 8 மாதங்களாக ஓய்வூதியம் வழங்கப்பட்டிருந்தது.<br>• 2014 ஆகஸ்ட் வரையிலான காலத்தின்போது காலமாகிய 34 ஓய்வூதியம் பெறுநர்களின் 17 பேருக்குரிய மரணத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2011 ஜுன் 30 ஆந் திகதிய 05/2011 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 21,125 | கிரிபாவ பிரதேச செயலகத்தின் ஓய்வூதியம் பெறுநர் ஒருவருக்கு வெளிநாடு சென்றிருந்த காலப் பகுதியான 2013 ஆகஸ்ட் 05 தொடக்கம் 2014 ஒக்டோபர் வரையான காலத்திற்கும் வாழ்க்கைச் செலவுப் படி கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதிய MED/5/RD/4 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | 720,394,506 | 2014 ஆம் ஆண்டில் செய்யப்பட வேண்டியதும் 2014 ஆம் ஆண்டில் குறித்த அபிவிருத்திச் செயற்திட்டம் அமுலாக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டதுமான 30 பிரதேச செயலகங்களின் 1,416 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுதல் தொடர்பான கைநூலில் குறிப்பிடப்பட்ட அச்செயற்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டின்போது அமுலாக்கப்பட வேண்டியபோதும் அவ்வாறு செய்யாது அச் செயற்திட்டங்கள் எதிர்வரும் ஆண்டுகளிற்கெனத் தொடரப்பட்டிருந்தன. |

## 3.9 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிட்டு விடுதல், செயற்திட்டங்களை நிறைவேற்றாது கைவிட்டுவிடுதல், செயற்திட்டக் காலதாமதம் போன்றன தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது தெரியவந்த சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிட்டு விடுதல்

பல்வேறு காரணங்களைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 17 பிரதேச செயலகங்களின் ரூபா 183,644,452 கூட்டுத்தொகைச் செலவிலான 493 திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாதிருந்தன.

### (ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 19 பிரதேச செயலகங்களது ரூபா 668,760,214 கூட்டுத் தொகையுடைய 860 செயற்திட்டங்கள் குறித்த காலப்பகுதிக்குள் நிறைவேறாதிருந்தன. செயற்திட்டங்களது முடிவுறுத்தல் காலதாமதம் 01 முதல் 06 மாதங்கள் வரையிலானதாகும். செயற்திட்டங்களை நிறைவேற்றாமைக்குப் பல்வேறு காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டபோதும், அக் காரணங்களை உறுதிப்படுத்துவதற்கான எழுத்து மூலச் சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பணம் விடுவிக்கப்பட்டபோதும் முன்னேற்றம் அடைந்திராத செயற்திட்டங்கள்**

----------------------------------------------------------------------------------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அம்பன்பொல பிரதேச செயலகத்தில் தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூன்று நீர்ச் செயற்திட்டங்களுக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 23,727,448 தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அச் செயற்திட்டங்களின் முன்னேற்றம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

(ii) 2014 ஆம் ஆண்டிற்கான 60 மின்சாரத் திட்டங்களுக்கு ரூபா 19,817,582 கூட்டுத்தொகை இலங்கை மின்சார சபைக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 12 பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 5,941,798 கூட்டுத்தொகைப் பெறுமதியுடைய ஏறக்குறைய 15 மின்சாரத்திட்டங்கள் வேலை முடிவடைந்து செயற்படுத்தப்படாதிருந்தன. இது தொடர்பாக எதுவித மேற்பார்வையோ அல்லது தொடர் நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படாதிருந்தன.

(iii) ரிதீகம பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 1,816,719 மதிப்பீட்டின் கீழ் நெலவுல்ல கிராமத்திற்குச் செல்லும் வீதி கொங்கிரீட் இட்டிருந்ததுடன் அதற்கென ரூபா 1,626,814 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது. வீதியின் ஏறக்குறை 60 அடி நீளப்பகுதி நொறுங்கி உள்ளே விழுந்திருந்தது. இப்பகுதி அதிக பள்ளமுடையதால் அதற்குப் பொருத்தமான விதத்தில் வெரகென்வும் இடுவதற்கு மதிப்பிடப்பட்டிராததுடன், நொறுங்கிய பகுதி மதிப்பிட்டின் பிரகாரம் 1:3:6 (40 மில்லிமீட்டர்) கலவையுடனான நியமத்திற்கமையத் தயாரிக்கப்பட்டிருக்கவுமில்லை.

**3.10 செயலாற்றல்**

2014 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காணப்படுகின்றன.

**(அ) போதியளவு நிறைவேறாத பிரதான பணிகள்**

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்களில் பிரதான பணிகள் போதியளவு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(i) பமுனாகொட்டுவ பிரதேச செயலகம் ‘‘கமநெகும 2014 ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை நிகழ்ச்சித்திட்டம்’’ என்பதன் கீழ் மேற்கொண்ட ரூபா 443,428 பெறுமதியான 2 நிர்மாண வேலைகள் குறித்தபடி நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ‘‘மாகாண எழுச்சி 2014’’ என்பதன் கீழ் ரூபா 1,273,656 பெறுமதியான 2 நிர்மாண வேலைகள் உடன்படிக்கைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திவி நெகும தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் VI ஆம் கட்டத்தின் கீழ் குருணாகலை மாவட்டத்திற்கு 600,000 தென்னங் கன்றுகளை விநியோகிப்பதற்கென தெங்கு அபிவிருத்திச் சபைக்கு ரூபா 60,000,000 கொடுப்பனவு செய்யப்படுவதற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டு இறுதியளவில் 414,714 தென்னங் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 41,471,400 ஆகும். அதில் ரூபா 23,830,600 மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் ரூபா 18,528,600 பயன்படுத்தப்படாதிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட தென்னங் கன்றுகளுக்கு ரூபா 17,640,800 கொடுப்பனவு செய்யப்படாதுமிருந்தது.

(iii) சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 30 பிரதேச செயலகங்களில் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 5466 செயற்திட்டங்களுக்கான கிரயத்தில் ரூபா 135,458,278 பெறுமதியான வேலைகள் முடிவடைந்திருந்தபோதும், 20 பிரதேச செயலகங்கள்

மாத்திரம் குறித்த உபகரணங்களை நலன் பெறுநர்களுக்கிடையே விநியோகித்திருந்தன. எனினும், குறித்த உபகரணங்களைக் கொள்வனவு செய்திருந்த நிறுவனங்களுக்கு 3,629 உபகரணங்களுக்கான ரூபா 31,082,340 கொடுப்பனவு செய்யப்படவேண்டியிருந்தது.

(iv) சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்து விநியோகிக்கப்படவிருந்த ரூபா 13,360,068 பெறுமதியான 1,739 உபகரணங்கள் விநியோகிக்கப்படாது 5 பிரதேச செயலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) திட்டமிடல்**

---------------------

**வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்**

-------------------------------------------------------------------

2014 பெப்ரவரி 17 அந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கேற்ப 30 பிரதேச செயலகங்களில் செயல் நடவடிக்கை திட்டங்கள் தயாரிக்கப்படாதிருந்தன.

**3.11 வங்கிக் கணக்கைச் செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகள்**

---------------------------------------------------------------------------------------------------------

**சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள்**

-----------------------------------------------------------------

குருணாகலை மாவட்டச் செயலகமும் 2 பிரதேச செயலகங்களும் 2014 டிசெம்பர் மாதத்திற்கெனத் தயாரித்திருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட சீராக்கல் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம், 6 மாதங்கள் தொடக்கம் ஓராண்டு வரையான காலப்பகுதிக்குரிய வழங்கப்பட்டு கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 4,233 க்கான காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்கணக்கிணக்கக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட இனங் காணப்படாத ரூபா 9,955 மற்றும் இனங்காணப்படாத செலவாகிய ரூபா 20 என்பவற்றைக் கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

## 3.12 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாக இருந்தன. கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது தெரியவந்த அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்களது விபரம் கீழே காணப்படுகின்றது.

(அ) ''வரையறுக்கப்பட்ட குருணாகலை பெருந்தோட்டக் கம்பனி'' யால் 1999 ஆம் ஆண்டின்போது கனேவத்த பிரதேச செயலாளரிடம் ஒப்படைந்திருந்த ''கொரகஹவத்த'' எனப்படும் காணிக்கு கனேவத்த பிரதேச செயலாளரால் 2005 ஆம் ஆண்டின்போது ரூபா 37,621,110 காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அக்காணி 1999 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் ரூபா 304,000 வாடகைக் கொடுப்பனவு அடிப்படையில் 30 ஆண்டுகளுக்கு ''வரையறுக்கப்பட்ட ஹிரியால கமநலக் கம்பனிக்கு'' குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இற்றைவரை 75 ஏக்கர் அளவிலான அக்காணிக்கு 1999 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் அறவிடப்படும் குத்தகை வாடகையை ரூபா 304,000 தொடக்கம் அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. இக் காணியில் அமைந்துள்ள அண்ணளவாக ரூபா 6,386,867 பெறுமதியான 111 தேக்கு மரங்கள் அனுமதியின்றி 2014 ஆம் ஆண்டின்போது வெட்டி வீழ்த்தப்பட்டிருந்தன. இதன் பொருட்டு வனபரிபாலன உத்தியோகத்தர்களின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, அத்துமீற்வெட்டி வீழ்த்தப்பட்ட தேக்கு மரங்களில் 93 மரங்கள் 14 ஆண்டுகள் பழமையானவை என்பதும் மரங்களது சுற்றுவட்ட அளவு சரியானவையே என்றும் கனேவத்த உத்தியோகத்தர் சான்றுறுதி வழங்கியிருந்தபோதும், அது தொடாபில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ''திவிநெகும தேசிய நிகழ்ச்சித்திட்டம்'' கட்டத்தின் கீழ் தெங்கு அபிவிருத்திச் சபை 14 பிரதேச செயலகங்களுக்கு ரூபா 23,425,700 பெறுமதியான 234,257 தென்னங் கன்றுகளை வழங்கியிருந்தது. எனினும், நலன்பெறுநர்களுக்கு ரூபா 14,087,100 பெறுமதியான 140871 தென்னங் கன்றுகளே வழங்கப்பட்டமையால் ரூபா 9,398,600 பெறுமதியான 93,986 தென்னங்கன்றுகள் நலன்பெறுநர்களுக்கு வழங்கப்படாதிருந்தன.

(இ) குருணாகலை மாவட்டச் செயலாளருக்கு ஓராண்டில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகூடிய எரிபொருளின் அளவு 2700 லீட்டர்கள் ஆகும். எனினும், மாவட்டத்

திட்டமிடல் பிரிவின் எரிபொருள் கட்டளைகளின் மூலம் 3675 லீட்டர் எரிபொருள் பெறப்பட்டமையால் 2014 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்த எரிபொருளின் அளவு 6375 லீட்டர்கள் ஆகும். அதன் பெறுமதி ரூபா 772,012 ஆகும். 2013 ஆம் ஆண்டில் பெறக்கூடியதாகவிருந்த எரிபொருள் படிக்குப் புறம்பாக மாவட்டச் செயலகத்தின் 4 பிரிவுகளிலிருந்து அதிகப்படியாகப் பெற்றுக் கொண்ட எரிபொருளின் அளவு 3188 லீட்டர்கள் அகும். அதன் பெறுமதி ரூபா 383,124 ஆகும்.

(ஈ) குருணாகலை மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்திற்குரிய எரிபொருள் எல்லையினை பெற்றுக்கொண்டமைக்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டின்போது ரூபா 54,810 பெறுமதியான 459 லீட்டர் எரிபொருளையும் 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 34,756 பெறுமதியான 287 லீட்டர் எரிபொருளையும் எரிபொருள் கட்டளைகளின் மூலம் அவர் பெற்றிருந்தார்.

## 3.13 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலகப் பிரிவின் ஓய்வூதியம் பெறுநரது ஓய்வூதியக் கோவை தொலைந்திருக்கையில் 2014 ஒக்தோபர் மாதத்திற்கான அந்த ஓய்வீதிய பெறுநரது ஓய்வூதியக் கொடுப்பனவின் வரியான தன்மையை உறுதி செய்யப்படாது ரூபா 23,900 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேற்படி பிரதேச செயலகத்தின் 04 ஓய்வீதியம் பெறுநர்கள் உயிர்வாழ்வதை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள் பெறப்படாது அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) பமுனாகொட்டுவ பிரதேச செயலகத்தில் இடர் கடன் வழங்கப்படுதல் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பூரணப்படுத்தப்படாத உடன்படிக்கைகளின் அடிப்படையில் 3 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 519,000 இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்காக நடாத்தப்பட்ட துவிச்சக்கர வண்டி ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்ற 41 பேருக்கு வழங்கப்பட்ட ரூபா 1,974,500 பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதாக வெற்றியாளர்கள் தமது கொடுப்பனவு உறுதிச் சான்றுகளிலோ அல்லது பற்றுச்சீட்டுக்கள் வழங்குவதன் மூலமோ உறுதி செய்திருக்கவில்லை.

(உ) குருணாகலை மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு ரூபா 14,545,225 பெறுமதியான 155 கணனிகளைக் கொள்வனவு செய்கையில் அதற்கான தொழில்நுட்பக் பகுப்பாய்வுக் குழுவில் அவ்விடயம் தொடர்பான நிபுணர் ஒருவர் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி இலக்கம் 2.8.5 க்கமைய நியமிக்கப்படவில்லை. அத்துடன் மாதிரிப் படிவத்தில் (TAB) கணனிகளது தேவை தொடர்பாக பிரதேச் செயலகங்கள் எதுவுமே கோரி இராததுடன் அக்கணனி கொள்வனவிற்கு சாத்தியவள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 15 செயலகங்கள் அக்கணனிகளை பெற்றுக் கொண்டதை அறிவிக்கும் கையிருப்புச் சான்றிதழ்களையும் சமர்ப்பிக்காதிருந்தன.

(ஊ) குருணாகலை மாவட்டத் திட்டமிடல் பிரிவிற்கு ரூபா 1,017,790 செலவில் வீடியோ கெமராவும் துணைப் பாகங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பொருட்டு முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஏறக்குறைய ஓராண்டாக அதன் பொருட்டு தொழில்சார் நிபுணர் ஒருவரைத் தேட முடியாது போனமையால் வீடியோ கெமரா பயன்படுத்தப்படாதிருந்தது.

(எ) அரசாங்கப் பணிகளுக்காக கொள்வனவு / சேவைகள் பெறப்படும்பொது பொருட்களும் சேவைகளும் குறித்தவாறும் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியவாறும் வழங்கப்படுதல் தொடர்பாகத் திருப்தி அடைந்ததன் பின்னரே கொடுப்பனவை மேற்கொள்ளலாமெனினும் மஹவ பிரதேச செயலகம் அந்த நியமத்திற்கு முரணாக 9 நலன்புரிச் சங்கங்களுக்குக் கொள்வனவு செய்த பொருட்களைப் பெறுவதற்கு முன்னரே ரூபா 62,820 கொடுப்பனவு செய்திருந்தது.

## 3.14 நட்டங்களும் இழப்புகளும்

---------------------------------------------------

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்களும் இழப்புகளும் தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) கனேவத்த பிரதேச செயலகத்தின் குத்தகைப் பேரேட்டின் பிரகாரம் கொரகஹவத்த காணியை 1999 ஜனவரி 18 தொடக்கம் 2014 டிசெம்பர் 31 வரை 16 ஆண்டுகால குத்தகைக்கு வழங்குவதற்கென ரூபா 6,406,140 அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 19,213,504 வருமானத்தை அரசாங்கம் இழந்திருந்தது.

(ஆ) உடுபத்தாவ பிரதேச செயலகத்தின் வாகனம் ஒன்று விபத்திற்குள்ளானதால் ஏற்பட்ட ரூபா 114,650 நட்டமானது 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் குறித்த நபர்களிடமிருந்து அறவிடப்படாதிருந்தது.

(இ) தேசத்துக்கு மகுடம் கண்காட்சி வளாகத்தில் 03 ஆம் 04 ஆம் இலக்கச் சிற்றுண்டிச் சாலைகளுக்கு கூறு விலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் மீண்டும் கூறு விலைகள் கோரப்பட்டு 03 ஆம் இலக்கச் சிற்றுண்டிச் சாலைக்கு ரூபா 350,000 க்கான கூறுவிலை தனியார் நிறுவனம் ஒன்றினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொள்வனவுக் குழுவால் அக் கூறு விலை நிராகரிக்கப்பட்டமையால் அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வருமானம் இழப்பிற்குள்ளாயிருந்தது.

(ஈ) கிரிபாவ பிரதேச செயலகப் பிரிவில் 2008 ஆம் ஆண்டின்போது தனியார் கம்பனி ஒன்றினால் நிர்மாணிக்கப்பட்ட தொலைபேசிக் கோபுரம் அமைந்துள்ள காணி அக் கம்பனிக்கு நெடுங்காலக் குத்தகை உடன்படிக்கையின் கீழ் வழங்கப்படாததுடன் அதன் பொருட்டு ஏறக்குறைய 6 ஆண்டு காலத்திற்கு அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வருமானம் இழப்பிற்குள்ளாகியிருந்தது.

(உ) மாஸ்பொத்த பிரதேச செயலகம் சாரகம சனாதிபதி மகளிர் வித்தியாலயத்திற்குக் குடிநீர் பெறுவதற்காக ரூபா 693,825 மதிப்பீட்டுக் கிரயத்திலான கிணறு ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அது உடைந்து வீழ்ந்ததால் ரூபா 227,097 நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3.15 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வீரம்புகெதர பிரதேச செயலகத்தில் ''மாகாண எழுச்சி 2014'' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொண்ட உஹுமிய அனுர குடியேற்றத் திட்ட குடி நீர் செயற்திட்டத்திற்கு ரூபா 294,512 செலவிடப்பட்டிருந்தது. அச் செயற்திட்டம் தோல்வியுற்றதால் செலவிடப்பட்ட தொகை சிக்கனமற்ற செலவினமாகியது.

## 3.16 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது கீழே குறிப்பிடப்பட்ட நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) "திவிநெகும VI ஆம் கட்டத்தின்" கீழ் சில பிரதேச செயலகங்களில் மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது விநியோகிக்கப்பட்டிருந்த தென்னங் கன்றுகளில் 30 முதல் 40 சதவீதமானவை 4 மாதங்களைக் கடந்துவிட்டனவாக இருந்தபோதும் முறைப்படி அவற்றை நடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. பயிர்ச்செய்கை வெற்றியளிப்பதற்கு நடுகைக்கான தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டு ஒரு வார காலத்திற்குள் முறையாக அவற்றை நட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்பட்டமைக்கான முறையான கண்காணிப்பொன்று பிரதேச செயலகம் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரது 2013 டிசெம்பர் 18 ஆந் திகதிய திவிநெகும தேசிய நிகழ்ச்சித் திட்டக் கடிதத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட தென்னங் கன்றுகள் தொடர்பாகத் பின்தொடர் நடவடிக்கை அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், பிரதேச செயலகமும் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தன.

(இ) மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவில் மல்லியகொட எனும் இடத்திலிருந்து அக்காடே எனும் இடம் வரையான வீதியில் பக்கச் சுவர்களை அமைத்து வீதியில் கொங்கிரீட் இடுவதற்கு ரூபா 1,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2014 ஆகஸ்ட் 25 முதல் 2014 நவெம்பர் 25 வரையான காலப்பகுதியினுள் நிறைவேற்றப்படுவதற்காக அவ் வேலை அக்காடே ஐக்கிய கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததெனினும் மதிப்பீட்டின் பிரகாரம் செயற்திட்டப் பணிகள் முற்றாக நிறைவு பெறாதிருக்கையில் ஒரு பகுதி மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு அதற்கென ரூபா 305,196 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்ததுடன் ஒப்பந்தகாரருக்கு எதிராக முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) மேற்படி பிரதேச செயலகப் பிரிவின் சிங்கபுர முதலாம் ஒழுங்கை தொடக்கம் வெலிகெபொல வரை செல்லும் வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்கு ரூபா

1,000,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், 2014 ஜுலை 15 முதல் முதல் 2014 ஒக்டோபர் 15 வரையான காலப்பகுதியின்போது வேலை முடிவுறும் விதத்தில் வேலையானது ''அல்ஹம்ரா கிராம சமூர்த்தி சங்கத்திடம்'' ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், மதிப்பீட்டின் பிரகாரம் செயற்திட்டப் பணிகள் முற்றாக நிறைவேறாது ஒரு பகுதி வேலை மாத்திரமே நிறைவடைந்த நிலையில் அதற்கென ரூபா 505,608 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தகாரருக்கு எதிராக முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

## 3.17 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது கீழே குறிப்பிடப்பட்ட நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்கமுவ பிரதேச செயலகத்தின் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது குறித்த ஒப்பந்தகாரரும் பிரதேச செயலகமும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.4 வழிகாட்டலுக்கு முரணாக தவறான கூறு விலைகளைக் குறிப்பிடுவதன் மூலம் உடன்படிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. இது தொடர்பாகக் குறித்த நபர்கள் கவனஞ் செலுத்தாதிருந்தனர்.

(ஆ) 2014 தேசத்துக்கு மகுடம் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் குருந்தாவ (ஜாகம) மற்றும் கச்டகடுவ குடி நீர் செயற்திட்டத்தின் நீர்த்தாங்கி நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கம் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளைக் குறித்த நபர்கள் மேற்கொள்ளாதிருந்தனர்.

(இ) வீரம்புகெதர பிரதேச செயலகம் அமைக்கப்பட்டு பல ஆண்டுகளாகியும் அது அமைந்துள்ள காணியின் உரிமை பிரதேச செயலாளருக்கு வழங்கப்படவில்லை.

(ஈ) இப்பாகமுவ பிரதேச செயலகம் ''பன்முகப்படுத்தப்பட்ட முதலீடு 2014'' என்பதன் கீழ் ரூபா 34,450 பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்திருந்தபோதும், அப்பொருட்கள் களஞ்சியத்தில் பெறப்படாதிருக்கையில் களஞ்சியப் பதிவேடுகளில் அவை பெறப்பட்டதாகப் பதிவாகியிருந்தது. நலன்பெறுநர்களுக்கிடையே வழங்கப்படுவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 119,400 பெறுமதியான 07 உபகரணங்கள் கொள்வனவு

செய்யப்பட்டுக் குறிப்பிடப்பட்ட காலம் கடந்திருந்தபோதும் அவற்றை முறைப்படி விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மாவட்டச் செயலகத்தின் ஒவ்வொரு கொள்வனவும் சம்பந்தமாக வெவ்வேறு கோவைகள் பேணப்படுவதற்குப் பதிலாக பல கொள்வனவுகளுக்கு ஒருகோவை மாத்திரம் பேணப்பட்டிருந்தது. அவற்றிற்குரிய கூறு விலைக் கோரல்களும் பிணை முறிகளும் சீரற்றவாறு வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) ஓய்வூதியக் கொடுப்பனவின்போது 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அம்பன்பொல பிரதேச செயலகத்தில் கொடுப்பனவு செய்யப்படாத ஓய்வூதியம் கிரமமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) அம்பன்பொல மற்றும் கிரிபாவ பிரதேச செயலகங்களில் முறையே 1 ½ ஏக்கர் மற்றும் 03 ஏக்கர் காணிகளில் குருணாகலை மாவட்டச் செயலாளரது தலைப்பில் செலவு மேற்கொள்ளப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தபோதும், ஆகக் குறைந்தது அளவைகள் மேற்கொள்ளப்பட்டு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டேனும் இருக்கவில்லை.

(ஏ) மஹவ பிரதேச செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் கீழ் தொண்டர் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கெனக் கொள்வனவு செய்திருந்த ரூபா 33,250 கூட்டுப் பெறுமதியுடைய 7 ஐநூறு லீட்டர் நீர்த்தாங்கிளும் விஹாரை ஒன்றிற்கு வழங்குவதற்கெனக் கொள்வனவு செய்திருந்த ரூபா 9,440 பெறுமதி வாய்ந்த வாத்தியக் கருவிகளும் விநியோகிக்கப்படாது களஞ்சியத்தில் இருந்தன.

(ஐ) கிரிபாவ மற்றும் அம்பலன்பொல பிரதேச செயலகங்களில் 18 வயதுக்குக் குறைந்த கணக்குகளுக்கு உரித்தான முறையே மூவர் மற்றும் இருவருக்கு வயது குறைந்தோருக்கான பாஸ் புத்தகங்கள் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2009/2010 காலப் பகுதியின்போது கிரிபாவ பிரதேச செயலக வளாகத்தில் நிறுவனம் ஒன்றினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தினது நிர்வாக நடவடிக்கைகள் கிரிபாவ பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், அக்கட்டிடத்தின் உரித்து முறைப்படி சுவீகரிக்கப்படவில்லை.

(ஓ) எழுபது வயதுக்கு மேற்பட்ட அநாதரவான வயதானவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தப் படியாகிய ரூபா 1,000 கிரிபாவ பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 131 பேருக்கு வழங்கப்படாத ரூபா 131,000 தொடர்பாக

உத்தியோகத்தர்களால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**3.18 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குருணாகலை மாவட்டச் செயலகம் மற்றும் 30 பிரதேச செயலகங்களது தகவல்களின் பிரகாரம் பதவியணியினரின் நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 101 | 91 | 10 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 62 | 47 | 16 | 01 |
| (இ) | இரண்டாந்தர நிலை | 3,015 | 2,809 | 209 | 03 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 316 | 303 | 21 | 08 |
| (உ) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 03 | 08 | - | 05 |
| | மொத்தம் | 3,497 | 3,258 | 256 | **17** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 256 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்டச் செயலகம் தவறியிருந்தது.

(ஆ) இப்பாகமுவ பிரதேச செயலகத்தில் மூன்றாம் நிலை உத்தியோகத்தர் ஒருவரும் இரண்டாந்தர உத்தியோகத்தர் ஒருவரும், நாரம்மல, வாரியப்பொல பிரதேச செயலகங்களில் மூன்றாம் நிலை உத்தியோகத்தர்கள் இருவரும் பண்டுவஸ்நுவர (மேற்கு), அளவ்வை, எஹெடுவெவ, கொபெய்கனே பிரதேச செயலகங்களில் ஆரம்ப மட்டத்திலான 08 உத்தியோகத்தர்களும், பண்டுவஸ்நுவர (கிழக்கு) பிரதேச செயலகத்தில் 5 ஏனைய சேவையினரும் அடங்கலாக 11

உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிக்குப் புறம்பாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) பமுனாகொட்டுவ பிரதேச செயலகத்தில் கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் பதினொன்றும் 7 கிராம உத்தியோகத்தர்களது பதவிகளும் வெற்றிடங்களாக இருந்தன.

(ஈ) மஹவ பிரதேச செயலகத்துடன் இணைந்த விதாதா நிலையத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் 2 ஆண்டுகளுக்கு மேலாக வெற்றிடமாக இருந்தன. அதன் காரணமாக அந்த அலுவலகத்தில் மிக அதிக பெறுமதி வாய்ந்த பல்வேறு உபகரணங்கள் பயன்படுத்தப்படாது இருந்தன.